Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 168/2025 PW-1**

Name : ராமு
Father / Husband name : ஜனார்த்தனன்
Village : தாதாபுரம்
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் மளிகைக்கடை வைத்துள்ளேன். சாட்சி துரைராஜன் எனது ஊரை சேர்ந்தவர். சாட்சி சுரேஷ்பாபு என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 4 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் இரவு 09.30 மணியளவில் எனது வீட்டிற்கு எதிரில் சண்டை நடந்தது. அதனை நான் மறித்துவிட சென்றபோது யாரோ எனது கையில் கிழித்ததுபோல் இருந்தது. அதில் எனது இடது கையில் காயம் ஏற்பட்டது. என்னுடன் மறிக்க வந்த துரைராஜன் என்பவருக்கும் கையில் அடிப்பட்டது. அடிப்பட்ட நானும் துரைராஜனும் தாதாபுரம் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். பின்னர் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று எதிரியின் மீது சந்தேகத்தின்பேரில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரிகள் தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 04.08.2021 அன்று இரவு 09.30 மணிக்கு எதிரி அவரின் மனைவியுடன் சண்டைபோட்டு அவரை அடிக்கவந்தபோது எதிரியின் மனைவி உங்கள் வீட்டில் வந்து மறைந்துகொண்டதால் எதிரி உங்கள் வீட்டிற்கு வந்து உங்களை அசிங்கமாகபேசி கையில் வைத்திருந்த பீர்பாட்டிலால் உங்கள் கழுத்தில் குத்தவந்தார் என்றும், அதனை நீங்கள் தடுத்தபோது உங்கள் இடது கையில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும், உங்களை கொலைமிரட்டல் விடுத்து வயிற்றில் பாட்டிலால் குத்தவந்தபோது துரைராஜன் அதனை தடுத்தபோது அதில் துரைராஜனுக்கு கையில் அடிப்பட்டது என்றும், அடிப்பட்ட நீங்களும் துரைராஜனும் தாதாபுரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு எதிரியின் மீது எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்தீர்கள் என்றும், அந்த புகாரில் போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் சுமார் 4 வருடத்திற்கு முன்னர் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் இருட்டான இடத்தில் நடந்தது என்றால் சரிதான். நானும் துரைராஜனும் சண்டை மறிக்க சென்றோம் என்றால் சரிதான். எனது கையில் ஏற்பட்டக்காயம் யாரால் ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 168/2025 PW-2**

Name : துரைராஜன்
Father / Husband name : ஏழுமலை
Village : தாதாபுரம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் விவசாயம் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தெருவில் இருப்பவர். சாட்சி சுரேஷ்பாபு என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 4, 5 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் அ.சா.1 ன் வீட்டின் எதிரில் சண்டை நடந்தது. அதனை நானும் ராமுவும் மறிக்கச்சென்றபோது எங்களுக்கு கையில் அடிப்பட்டது. அந்தயிடம் இருட்டாக இருந்ததால் எங்களை யார் எதனால் தாக்கினார்கள் என்று தெரியாது. அடிப்பட்ட நானும் ராமுவும் தாதாபுரம் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். பின்னர் ராமு வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். யார் மீது புகார் கொடுத்தார் என்று தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரிகள் தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த

04.08.2021 அன்று இரவு 09.30 மணிக்கு எதிரி அவரின் மனைவியுடன் சண்டைபோட்டு அவரை அடிக்கவந்தபோது எதிரியின் மனைவி ராமுவின் வீட்டில் வந்து மறைந்துகொண்டதால் எதிரி ராமுவின் வீட்டிற்கு வந்து ராமுவை அசிங்கமாகபேசி கையில் வைத்திருந்த பீர்பாட்டிலால் ராமுவின் கழுத்தில் குத்தவந்தார் என்றும், அதனை ராமு தடுத்தபோது ராமுவின் இடது கையில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும், ராமுவிற்கு கொலைமிரட்டல் விடுத்து வயிற்றில் பாட்டிலால் குத்தவந்தபோது நீங்கள் அதனை தடுத்தபோது அதில் உங்களுக்கும் கையில் அடிப்பட்டது என்றும், அடிப்பட்ட நீங்களும் ராமுவும் தாதாபுரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு ராமு எதிரியின் மீது எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்தார் என்றும், அந்த புகாரில் போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.